1971 டிசம்பர் 4]

† 51. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Financial Statement of the Tamil Nadu Electricty Board for the year 1970-71 (English and Tamil).

@ Depatched to Members on 15th November 1971.

& Depatched to Members on 25th November 1971.

£ Despatched to Members on 3rd December 1971.

† Despatched to Members on 2nd December 1971.

இணைப்பு—1.

[10-ம் பக்கத்தில் 71-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற் கூடங்கள் தமிழக அரசு அனுமதியுடன் மத்திய ஆய்வுக் குழுவினால்

(அ) கீழ்ப்பாக்கத்தில் இருந்த இந்திய மருத்துவ மனையை அரும்பாக்கத்திலுள்ள 100 படுக்கைகள் கொண்ட அறிஞர் அண்ணா அரசாங்க இந்திய மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டு 1970-லிருந்து சித்த, ஆயுர்வேதம், யுனானி முறைகளுக்காக நடத்தப்பட்டு வருகிறது. சித்த மருத்துவத்திற்கு 34 படுக்கையும், ஆயுர்வேதத்திற்கு 33-ம், யுனானிக்கு 33-ம் ஆக கொடுக்கப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டையில் இந்திய மருத்துவக் கல்லூரியில் சித்த முறையில் மட்டும் பி.ஐ.எம்; பட்டதாரிக்கானப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 30 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

முனிசிபாலிடி பஞ்சாயத்து யூனியன்களின் சார்பில் 422 மருத்துவ மனைகள் சித்த, ஆயுர்வேத, யுனானி முறைகளில் மருத்துவம் செய்யப்படுகிறது.

திருச்சி, ராமநாதபுரம், தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம் போன்ற தலைமை மருத்துவ அலுவலகங்களில் சித்த முறைப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டு மருத்துவம் செய்யப்படுகிறது.

சித்த மருத்துவத்துக்கென சிறப்பாக நான்கு ஆய்வுக் கூடங்கள் தமிகழ அரசு அனுமதியுடன் மத்திய ஆய்வுக் குழுவினால் (டெல்லி) தமிழ் நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை—

(1) பிணி நீக்கும் பரிகார ஆய்வுக் கூடம், அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனை, சென்னை.

(2) சித்த நூல் ஆராய்ச்சிக் கூடம், பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

(3) மூலிகை வளர்ப்பு ஆய்வு கூடம் பாளையங்கோட்டை.

(4) மூலிகைகளை தரப்படுத்தும் கூடம், காப்டன் சீனிவாச மூர்த்தி ரிசர்ச் இன்ஸ்டிடியூட், அடையாறு, சென்னை.

இவைகள் இன்னும் பூர்வாங்க வேலைகளில் இருக்கின்றன.

(இ) இந்திய மருத்துவத் துறைக்கென தனியாக இந்திய மருத்துவ இயக்குநர் நியமிக்கப்பட்டு 1—6—1970-லிருந்து அவருடைய அலுவலகம் இயங்கி வருகிறது.

(உ)—

நிதியாண்டு.	அரசு வரவு-செலவுத் திட்டம்.	சரியான செலவு
	ரூ.	ரூ.
1964–65	15,06,200	17,07,833
1965–66	19,45,600	20,56,122
1966–67	19,40,300	24,37,415
1967–68	20,80,100	24.10,066
1968–69	24,70,100	21.73,100
1969–70	26,76,500	30,48,200
1970–71	27,28,600	32,29,500

தெய்விகப் பேரவை அணையர் ஆலோசனையின்படி (தஞ்சாவூர் மாவட்டத்திலிருக்கும் 14 கோவில்களும், இராமநாதபுரம் மாவட்டத்திலிருக்கும் ஒரு கோவிலும் சித்த மருத்துவ மனைகளை ஏற படுத்தியிருக்கின்றன. முனிசிபாலிடிகளும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் புதிதாக மருத்துவமனை ஏற்படுத்தும் போது சித்த மருத்துவத்தை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றன.

இணைப்பு—2.

[64-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும் 1970-71-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை குறித்தும் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் விவாவதத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஓ. பி. ராமன் அவர்கள் ஆற்றும் உரை—

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும், 1970-71-ம் ஆண்டின் துணை நிதிநிலை அறிக்கையும் இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இம்மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் வேண்டுகின்றேன்.

1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ் நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த பிப்ரவரித் திங்களில், இந்த நிதிநிலை அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியது. ஆண்டு நிதிநிலை அறிக்கையும் துணை நிதிநிலை அறிக்கையும் சட்ட மன்றத்தினுல் விவாதிக்கப்படலாம் என்ருலும் இவை வாக்கெடுப்புக்கு உட்பட்டவையல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்ட மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின்பேரில் நடைபெற்ற விவாதத்தில் கூறப்பட்ட கருத்துக்களை ஒட்டி மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பப்பட்டுள்ளது.